**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :

Miscellaneous :

Preliminary register :

Sessions :

Sessions Case No. 58 of 2020

Deposition of witness for :
:

Prosecution : PW- 6
Defence :
Court :

Name : Subash

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of November 2022.**

முதல் விசாரணை:

நான் அரூர் தாலுக்கா நாசன்கொட்டாயில் குடியிருந்து வருகிறேன். நான் வெப்பாலம்பட்டி கடை எண்.2936 மதுபானக்கடையில் மேற்பார்வையாளராக சம்பத்திற்கு முன்பு சுமார் 1 ஆண்டாக பணி செய்து வந்தேன். என்னுடன் 3 விற்பனையாளர்கள், 1 உதவி விற்பனையாளர் மற்றும் உதவி மேற்பார்வையாளராக ஒருவரும் பணி செய்து வந்தோம். 15.12.2018 இரவு சுமார் 11.00 மணியளவில் எனது உதவி மேற்பார்வையாளர் சிவகுமார் என்பவர் எனக்கு போன் மூலம் விற்பனையாளர்கள் ஆனந்தன் மற்றும் முருகன் விற்பனை தொகையை எடுத்துச்செல்லும் வழியில் இரு நபர்கள் துப்பாக்கியால் சுடுவிட்டு பணத்கொள்ளையடித்துவிட்டு சென்றுவிட்டதாக தகவல் சொன்னார். அதன் பிறகு ஊத்தங்கரை அரசு மருத்துவமணையில் காயம் பட்டவர்களுகரு முதலுதவி சிகிச்சை எடுத்துவிட்டு தருமபுரி அரசு மருத்துவமணைக்கு சென்று கொண்டிருப்பதாக தகவல் சொன்னார். நான் 1.00 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவமணைக்கு சென்றேன். நான் மருத்துவமணையில் சிகிச்சையிலிருந்தவர்களை பார்த்துக்கொண்டிருந்தபோது போலீசார் மருத்துவமணைக்கு வந்துவிட்டனர். போலீசார் முருகனிடம் வாக்குமூலம் வாங்கினர். இரவு 2.00 மணிக்கு ஆனந்தனை மேல்சிகிச்சைக்கு சேலத்திற்கு அழைத்து சென்றுவிட்டனர். நான் ஆனந்தனை சேலம் அரசு மருத்துவமணையில் சிகிச்சைக்கு அனுமதித்துவிட்டு விடியற்காலை எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். சம்பவம் நடந்தவுடனே சம்பவம் தொடர்பாக டாஸ்மாக் மாவட்ட மேலாளருக்கு தகவல் தெரிவத்துவிட்டேன். அடுத்த நாள் மாவட்ட மலாளர் கணக்குகளை சரிப்பார்க்க உதவி கணக்கு மோலாளர் மஞ்சுநாத் என்பவரை கடைக்கு அனுப்பி வைத்திருந்தார். பகர் 12.00 மணிக்கு கடைக்கு வந்து பூட்டை கல்லால் உடைத்து திறந்தோம். 2 விற்பனையாளர்கள் கோவிந்தராஜ், இளையராஜா மற்றும் நான், கணக்கு மேலாளர் ஆகியோர் கணக்கு வழக்குகளை சரிப்பார்த்தபோது சம்பவம் நடைபெற்ற தினத்தின் விற்பனை ஆனது ரு.2,90,830/- என கண்டறிந்து மாவட்ட மேலாளருக்கு கணக்கு மேலாளர் மூலமாக தகவல் தெரிவித்தோம். அதன் பிறகு காவல் துறையினருக்கு கொள்ளையடிக்கப்பட்ட தொகையின் மதிப்பை தெரிவித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை **1 , 2** எதிரிகள் தரப்பில்

சம்பவம் நடைபெற்ற அடுத்த நாள் கணக்குகளை சரிப்பார்த்த பின்பு 3, 4 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். கொள்ளைபோன தொகையின் மதிப்பை பில் ரசீதுகள் அடிப்படையில் பார்க்கவில்லை இருப்பின் அடிப்படையில் பார்த்தோம். இருப்பு பதிவேடு மற்றும் பொறுப்பு பதிவேடு அடிப்படையில் மதிப்பை கணக்கிட்டோம். இருப்பு பதிவேடு மற்றும் பொறுப்பு பதிவேட்டு ஆவணமோ நகலோ காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை. மதிப்பை மட்டும் தான் குறித்துக்கொடுத்தோம். காவல் நிலையத்திற்கு நானும் சிவகுமாரும் சென்றோம். காவல் நிலையத்திற்கு சென்றபோது கொள்ளைபோன தொகையின் மதிப்பை குறிப்பிட்டும் கடையின் சாவி, பில் புக்கை ஆகியவற்றை கண்டுபிடித்து தருமாறு புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். 16.12.2018 ல் அவ்வாறு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். சநான் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்ந்தார்களா என்றால் முருகன் ஏற்கனவே போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாக தெரிவிக்கிறார். நான் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு சென்றபோது ஆனந்தன் மற்றும முருகன் சுயநினைவுடன் தான் இருந்தனர். நான் மருத்துவமணைக்கு சென்ற

பிறகு போலீசார் சிறிது நேரத்தில் அங்கு வந்துவிட்டனர். போலீசாருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது.

**3**ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை**:** இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**